உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்

# சிதம்பராலய

# நவலிங்கமான்மியம்

இஃது.

பிர்ம்மஸ்ரீ.

ஸோமயாஜி அப்பாசாமிதீக்ஷிதரவர்கள்.

அளித்த,

சிதம்பர ரகசியம் என்னும் கிரந்தத்தின் சாரமாய்

சி. சை. வி. லை. மா.

அ. தங்கவேற்பிள்ளையால் இயற்றி

நவலிங்காலயத்திருப்பணி

இராமசாமிப்பரதேசியார் அவர்களால்

சிதம்பரம்

...சுந்தர விலாச அச்சுக்கூடத்திற்

...திப்பிக்கப்பட்டது.

1924

29 OCT 1924

Q23:417 N24 181325

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

# சிதம்பராலய

# நவலிங்கமான்மியம்.

இஃது

பிர்ம்மஸ்ரீ.

வேலாயுதம் அப்பாசாமிதீக்ஷிதரவர்கள்.

அளித்த,

சிதம்பர ரகசியம் என்னும் கிரந்தத்தின் சாரமாய்

சி. சை. வி. லே. மா.

அ. தங்கவேற்பிள்ளையால் இயற்றி

நவலிங்காலயத்திருப்பணி

இராமசாமிப்பரதேசியார் அவர்களால்

சிதம்பரம்

ஷண்முகசுந்தர விலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

Copy Right Registered.


இதன் விலை, 1924 அணா 4.

64/1420

29 OCT 1924

294.535
181325

29 OCT 1924



உ

O28:41
N4

# நவலிங்க ஆலயம்.

நவலிங்க ஆலயம் என்னும் சொற்றொடர் ஒன்பது லிங்கங்களையுடைய ஆலயம் என்பதை யுணர்த்தும். நவம்—ஒன்பது, லிங்க—சித்திரித்தல். ஆலயம்—கோயில்.

சிவபெருமான் நவந்தருபேதமாய் நாடக நடிக்கின்றாராகலின், இவ்விலிங்கங்களும் நவபேதமாயின. நவமூர்த்திகளாய் நவசத்திகளோடுங் கூடி நவவியூகமான உலகத்தை நவ நவமாகச்சித்திரிக்கின்றமையானும், நவக்கிரகங்களும் தம்மை வழிபட்டுய்யும் பொருட்டுச் சிவபெருமான் ஒருவரே, ஒன்பது லிங்கங்களாக அமர்ந்தருளினமையானும், இவ்வாலயம் நவலிங்காலயம் எனத் தொன்றுதொட்டு ஆன்றோர்களால் வழங்கப்பெற்றுவருகின்றது. இவ்வாலயத்தில், பிரதமமான பானுலிங்கத்தைச்சுற்றிலும் எண்வகையிலிங்கங்கள் பிரணவாகாரமாகச் சூழ்ந்திருக்கின்றன. ஆகையினால் இவ்வாலயம் சிதம்பராலயத்தின் சிரோபாகமென்பது, இனிது விளங்கும். இங்கே யெழுந்தருளியிருக்கும் மகாலிங்கம் பதினாறு கலைகளையுடைத்தாயிருத்தலை நன்கு காணலாம்.

உ

ௐ

மகாகணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

# நவலிங்கமான்மியம்.

—✤✤—

ஓம் நமோஹம் பதார்த்தாயலோகாநாம் சித்தியேதவே
சச்சிதாநந்தரூபாய சிவாயபரமாத்மனே.

உலகங்களைப் படைத்தருளுகின்ற பிரமதேவரின் புதல்வராகிய சௌனகாதி முனிவர்கள், தங்களுக்குள் தோன்றிய தோர் ஐயத்தை யாவரிடம் வினவுவோம் என்று யோசனைசெய்துகொண்டிருந்தார்கள். அப்பொழுது சர்வசாஸ்திர விசாரராகிய சூதமுனிவர் அவர்களிடம் சென்றார். அம்முனிவர்கள் சூதபுராணிகரைக்கண்டமாத்திரத்தே விரைந்தெதிர்சென்று முகமன்கூறி, அழைத்துவந்து ஓராசனமளித்து அதில் அவரையிருக்கச்செய்து அர்க்கியபாத்தியாசமனாதிகளை உதவி, அவர்சந்நிதியிற் பன்முறைபணிந்து நின்றார்கள். சூதபுராணிகர் இவர்கள் புரிந்த வழிபாட்டையும் அன்பையுங்கண்டு ஆனந்தமடைந்து இவர்கட்கென்ன உபகாரம் செய்யப்போகின்றோமென்று தம்முள்ளத்தே நினைத்தார்.

அச்சமயத்திலே சௌனகாதிமுனிவர்கள் சூதமுனிவரை நோக்கி திரிநேத்திரதாரராகி விளங்குகின்ற சிவபெருமானுக்கு இருகண்களாக இருக்கின்ற சூர்ய சந்திரர்களுக்குச் சிங்கவிராசியும் கடகவிராசியுமாக ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு இராசிகளேயிருக்க ஏனைய கிரகங்களுக்கு இரண்டிரண்டிராசிகள் ஏற்பட்டகாரணம் யாது? இதனையிவர்கள் யாவரிடம் பெற்றுக்கொண்டார்கள்? இதன் விரிவை எங்களுக்குத் தேவரீர் திருவாய்மலர்ந்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள்.

இதனைக்கேட்ட சூதமுனிவர் மனமகிழ்வெய்தி சிவத்தியானபராய்க்கண்களை மூடிச்சற்று நிஷ்டையிலிருந்து கண்களை விழித்துப்பார்த்து ஏ! முனிபுங்கவாகளே நீங்கள் வினவியவைகள் மிகவும் நன்று எனக்குத்தெரிந்தமாத்திரம் கூறுகின்றேன் நீங்கள் கேட்கக்கடவீர்கள், என்று சொல்லத்தொடங்கினார்.

முன்னொருகாலத்திலே காசிபகோத்திற்பவனாகிய சூர்யன் இப்பூமியில் பரதகண்டத்தின்கண் உள்ளபுண்யக்ஷேத்திரமாகிய பூலோககைலாசமென்கிற சிதம்பரதலத்தையடைந்து சிவகங்கையில் ஸ்நானஞ்செய்து சித்ஸபாநாதரையும் சிவகாமியம்மையாரையும் தரிசித்துச் சிவகங்கையின் வடகரையிலே ஒரு சிவலிங்கம் ஸ்தாபித்து அதனையன்போடு பூசைபுரிந்து வருவானாயினன். இப்படி நிகழுங்காலத்திலே ஒரு நாள் பரமகருணாநிதியாகிய ஸ்ரீமந் நடராஜப்பெருமான் இடபாரூடராய் உமாதேவியாரோடும் தோன்றியருளினர். பரிதியானவன்கண்டு பன்முறை பணிந்து பராவி நின்றனன். சிவபெருமான் ஏ! பாஸ்கர உனக்குவேண்டிய வரங்களைக்கேட்பாயாக, என்று திருவாய்மலர்ந்தருளினர். அவன் எம்பெருமானே அடியேன் ஆகாசத்திலேயே திரிகின்றவனாயினும் எனக்கு வசிப்பதற்கோர் வாசஸ்தானம் வேண்டும்; ஆகையால் தேவரீர் தந்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தனன். அப்பொழுது அகிலலோகைக நாயகராகிய சிவபெருமான் பூமியைப் பன்னிருகூறாகப் பகுத்து அதற்குமேடாதி மீனாந்தமாகப் பன்னிருராசிகளெனப் பெயர்தந்து அப்பன்னிரு இராசிகளையும் சூர்யனுக்கு வாசஸ்தானமாக வருளி அந்தர்த்தானமாயினர். சூரியன் வழிப்பட்டு பூசைபுரிந்த இலிங்கமே பானுலிங்கமெனப்படும். இச்சிவபூசாபலத்தால் கிரகாதிபதித்தவம்பெற்று பன்னிரண்டு இராசிகளிலும் சஞ்சரித்துக்கொண்டு அனேகபரிவாரங்களோடும் விளங்குவானாயினன்.

பின்னர் ஆத்திரேயகோத்திரோற்பவனாகிய அம்புலிபானவன் அரியமறைகளின் அந்தணமாய் விளங்குகின்ற அழகிய திருச்சிற்றம்பலத்தை யடைந்து அம்பலவாணனை அகத்தில் நினைத்து சிவகங்கையில் ஸ்நானம் செய்து அதன்வடகரையில் ஓர் சிவலிங்கம் ஸ்தாபித்து அதனைமிகுந்த அன்புடன் பூசை செய்துகொண்டு வருவானாயினன். அருட்பெருங்கடலாகிய ஸ்ரீமந் நடராஜப்பெருமான் ஒருதினத்திலே உமாசமேதராய் விருஷபவாகனத்தின் மேற்றோன்றியருள்வாராயினர். அதுகண்ட மதி மனமகிழ்ந்து நெக்கு நெக்குருகி ஆனந்தபாஷ்பஞ் சொரிய விம்மிதமுற்றுப் பரவசமடைந்து பன்முறைபணிந்தெழுந்து நின்றனன். சிவபெருமான் "ஏ கலாநிதியே" உன்பூசைக்கு நாம்

மகிழ்ந்தோம்; உனக்கு வேண்டிய வரங்களைக்கேட்பாயாக என்று திருவாய்மலர்ந்தருள குவித்த கரதலங்களையுடையவனு கிய குமுதநண்பன் எமபெருமானே யான்வசித்தற்கேற்றதோர் தானம்வேண்டும் என்று பிரார்த்தித்தனன். கருணாநிதியாகிய எமதையன் "யாம் முன்னரே சூர்யனுக்குப் பன்னிரண்டுராசி களைத்தந்தோம் அவைகளில் நீ, கடக மிதுன ரிஷப மேஷ மீன மகரம ஆதி ஆறுராசிகளையும் நமதாஞ்ஞையின்படியே பெற்றுக் கொள்வாயாக" என்று திருவாய் மலர்ந்தருளி அந்தர்த்தானமாயி னார். உடனே விதுவானவன் சிவபெருமான்மறைந்தருளிய திக்கு நோக்கி நமஸ்காரம் செய்து சூர்யனிடம் சென்று சிவாஞ்ஞை யின்படியே ஆறுராசிகளையும் பெற்றுக்கொண்டனன். இச்சிவ பூசாபலத்தினால் சிவபெருமானது சிரோபாகத்தில் இன்றும் விள ங்குவானாயினன். அனேகபரிவாரங்களையும் பெற்றான். இரவில் இருளை நீக்கும் ஒளியையும் பெற்றான். இவனடைந்தபலன்களு க்கு அளவேயில்லை. அனேகபழிகளையும் நீங்கினான். அமுதகிரண னானான். அனேக மனைவியரை அணைந்தான் யாவருக்கும் ஆனந்த த்தைத்தருகின்றனன். இவன்பூசித்த இலிங்கமே சோமநாதலி லிங்கம் எனப்பெயர் பெறும்.

பின் காசிபகோத்திரோத்துங்கனாகிய காரியானவன் காசி னியின் கண்ணே நிகரற்று விளங்குகின்ற விராட்புருடனது இருதயகமலத்தானமாகிய சிதம்பரத்தை வந்தடைந்து சிவகங்கை யில்ஸ்நானஞ்செய்து அதன் வடகரையிலே ஒருசிவலிங்கம் கண்டு அதனை விதிப்படியே அனேக நாள் அன்புடனே பூசைசெய்து கொண்டுவருவானாயினன். அனவரததாண்டவமூர்த்தியாகிய ஸ்ரீ மந் நடராஜப்பெருமான் ஒருதினத்தில் உமாதேவியாரோடும் இட பவாகனமேற்கொண்டெழுந்தருளி தரிசனம்கொடுக்க, அதனைக் கண்ட சௌரியானவன் ஆனந்தமடைந்து சிரசாஞ்சலிசெய்து அனேகமுறைபணிந்தெழுந்து அன்புடனேமனமுருகிநின்றனன். சிவபெருமான் "ஏமந்த உன்பூசைக்குமகிழ்வடைந்தோம் உனக்கு வேண்டியவரங்களைக்கேட்பாயாக" என்று திருவாய்மலர்ந்தருளி னார். அதற்கவன் எம்பெருமானே அடியேனுக்கு வேண்டியது ஓர் வாசஸ்தானம் என்று பிரார்த்திக்க சிவபெருமான் ஏ நீல நீ இரவியினிடம் ஒன்றும் மதியினிடம் ஒன்றும் ஆகஇரண்டுஇராசி களை நமதாஞ்ஞையின்படியே சென்றுபெற்றுக்கொள்வாயாக"

என்று திருவாய்மலர்ந்தருளி அந்தர்த்தானமாயினர். உடனே பானுசூனு சிவபெருமான் மறைந்தருளிய திக்குநோக்கி நமஸ்காரம்செய்து பானுமதிகளினிடம் சென்று பானுவினிடம் இருந்து மகரத்தையும் மதியினிடமிருந்து கும்பத்தையும் சிவாக்ஞையின்படியேபெற்றுக்கொண்டனன். இச்சிவபூசாபலத்தால் தன்தாயை உதைத்த அதிபாதகத்தினின்று நீங்கப்பெற்று கிரகாதிபதித்வம பெற்று அனேகபரிவாரங்களோடும் விளங்குவானாயினன். இவன் பூசித்தவிலிங்கம் சௌரிநாத லிங்கமென்று பெயர் பெறும

பிறகு ஆங்கிரகோத்திரோத்துங்கனாகிய பிரகஸ்பதி பிரமமே ஞானாகாசமாக எக்காலமும் நீக்கமற விளங்குகின்ற தில்லைவனத்தையடைந்து சிவகங்கையில் ஸ்நானம்செய்து ஜெபாதிகர்மாநுஷ்டானங்களை முடித்து, சிவகங்கையின் உத்தரதிக்கிலே ஒரு சிவலிங்கம் கண்டு அதனைவிதிப்படி அன்போடுபூசித்துவருவானாயினன். ஒருதினம் சிவபெருமான் விருஷபாரூடராய் உமாதேவியாரோடும் தோன்றிபருளவும் அதனைக்கண்ட சீவன் சிவபெருமானைப்பன்முறை பணிந்து வேதோக்தமாக அனேகதோத்திரங்களாற்றுதித்து அஞ்சலிபஸ்தனாய் நிற்க ஸ்ரீமந் நடேசப்பெருமான் ஏபிரகஸ்பதீ உன்னுடைய பூசைக்கு மனமுவந்தோம் உனக்கு வேண்டியவரங்களைக் கேட்பாயாக என்று திருவாய்மலர்ந்தருளினர். அதற்குப் பிரகஸ்பதி எம்பெருமானே எனக்கு வாசஸ்தானம் அருள வேண்டும் என்று பிரார்த்திக்கச் சிவபெருமான் ஏ வியாழ நீ சூர்யசந்திரர்களிடம் சென்று தனுசுமீனங்களைப் பெற்றுக்கொள்வாயாக என்று திருவாய்மலர்ந்தருளி அந்தர்த்தானமாயினர். சிவபெருமானை அவர்மறைந்தருளியதிக்கு நோக்கிவணங்கி அவ்விடம் விட்டகன்று அருணசோமர்களையடைந்து சிவாக்ஞைபின்படியே தனுசமீனங்களைத்தனக்கிருப்பிடமாகப் பெற்றுக்கொண்டனர், இச்சிவபூசாபலத்தினால் தேவர்களுக்காசாரியனாகவும் வாக்பதியாகவுமாயினர். அனேகபரிவாரங்களையும் பெற்றார். யாவரும் புகழத்தக்கமேன்மையையும் அடைந்தார். இது நிற்க.

பாரத்துவாசகோத்திரோத்பவனாகிய பௌமன், பராபரவஸ்துவாகியபரஞ்சோதி பாருளோர்கண்டு பரகதியடையபரமானந்த

சூரண்டவஞ்செய்தருளுகின்ற இச்சிதம்பரதலத்தையடைந்து சிவ பெருமானுக்கு இச்சாசத்திசொரூபமாய் விளங்குகின்ற சிவகங் கையில் ஸ்நானஞ்செய்து ஜெபாதிகன்மங்களைமுடித்து அதன் உத்தரதிக்கையடைந்து ஓர் சிவலிங்கம்கண்டு அதனை அன்புட னே அனேகநாள் அருச்சித்து வந்தான். ஒருநாள் சிவபெருமான் உமாதேவியாரோடும் இடபவாகனத்திற்றோன்றியருளினர். அத னைக்கண்ட அரத்தனனவன் அளவிலாமகிழ்ச்சிகொண்டு அநேக நமஸ்காரம் செய்து நிற்கச் சிவபெருமான் ஏ பூமகனே உன் னுடைய பூசைக்கு மனமகிழ்வெய்தினோம். உனக்கு வேண் டிய வரங்களைக்கேட்பாயாக என்று திருவாய்மலந்தருளி னர். அதற்கங்காரகன் அடியேனுக்கு வாசஸ்தானம் வேண்டு மென்றிரப்பச்சிவபெருமான் நீ ரவிமதிகளினிடம்சென்றுஇரண்டு ராசிகளைப்பெற்றுக் கொள்வாயாக என்று திருவாய்வலந்தருளி அந்தர்த்தானமாயினர். உடனே அங்காரகன் அருக்கனையும் மதியையுமடைந்து சிவாக்ஞையின்படியே மேட விருச்சிகங் களைப்பெற்றுக்கொண்டனன். இச்சிவபூசா பலத்தினால் மங்கலன் என்னும் சிவநாமத்தை யடைந்து கிரகாதிபதித்வம் பெற்று அநேக பரிவாரங்களையும் யாவருந்தொழும்படியா நின்ற பெரும் பேற்றையும் அடைந்தான். இவனால் பூசிக்கப்பட்ட இலிங்கம் பௌமலிங்கம் எனப்பெயர் பெறும்,

பார்க்கவகோத்திரோத் பவனாகிய சுக்கிரன்; பரங்கருணைத் தடங்கடலாகிய பரமசிவம் பரமானந்த தாண்டவம் செய்தருளு கின்ற பரமபதியாகிய தில்லையை யடைந்து சிவகங்கையிலே ஸ்நானம்செய்து ஜெபதபமுடித்து அதன் வடகரையிலே ஒரு சிவலிங்கம்கண்டு அதனை விதிப்படி அன்போடு பூசைபுரிந்து வந்தான். ஒருநாள் ஸ்ரீமந் நடேசபெருமான் உமாசமேதராய் ரிஷபவாகன மேற்கொண்டெழுந்தருளி தரிசனம் தந்தருள மிக்க அன்போடும் அவரது திவ்யசரணாரவிந்தங்களில் பணிதெழுந்து நின்றனன். சிவபெருமான உனக்கு வேண்டியவரங்களைக்கேட்பா யாக என்று திருவாய்மலந்தருளினர். அதற்குச்சுக்கிரன் எம்பெ ருமானே அடியேனுக்குவாசஸ்தானம் தந்தருளவேண்டுமென்று பிரார்த்திக்க நீ ரவிமதிகளிடம் சென்று ரிஷபதுலாம் என்னும் இரண்டு ராசிகளையுட் பெற்றுக்கொள்வாயாக வென்று திருவாய்

மலர்ந்தருளி அந்தர்த்தானமாயினர். உடனே சுக்கிரன் ரவிமதி களினிடம்சென்று சிவாஞ்ஞையின்படியே ரிஷபதுலாம் என்னும் இரண்டு இராசிகளையும் பெற்றுக்கொண்டனன் இச்சிவபூசா பலத்தினால் அசுரர்களுக்கும் ஆசாரியனானன்.கிரகாதிபதித்வம்பெற்று அநேகபரிவாரங்களையும் அடைந்து யாவரும் தொழும்படியான மேன்மையையு மடைந்தனன். இவனால் பூசிக்கப்பெற்ற இலிங்கம் பார்க்கவலிங்கம் எனப்பெயர் பெறும்.

அத்திரிகோத்தி ரோத்பவனாகிய சௌமியன் அரிபிரமேந் திரர்களாலும் அறிதற்கரியபரம் பொருள்; சிவகாமியம்மையார் காண அனவரதமும் சிற்சபையிலே ஆனந்ததாண்டவம் செய்தருளுகின்ற இப்புண்டரிக புரத்தை யடைந்து பொற்றாமரைவாவி யிலே ஸ்நானம் செய்து நித்ய கர்மநுஷ்டானங்களை முடித்து அதன் வடகரையிலே ஒரு சிவலிங்கம் கண்டு அதனைவிதிப்படி அன்போடும் பூசைசெய்துகொண்டு வருவானாயினன். ஒருநாள் ஸ்ரீமந் நடேசபெருமான் உமாதேவியாரோடும் விருஷபவாகனத்தின் மேற்றோன்றியருள புதனனவன்கண்டு ஆனந்தபரவசமடைந்து புளகாங்கிதங்கொண்டு அஞ்சலியஸ்தனாய் அநேக தோத்திரங்களைசெய்து நிற்கச்சிவபெருமான்; திருவுளமகிழ்ந்து; ஏ மதிமகனே உனக்குவேண்டிய வரங்களைக்கேட்பாயாக; என்று திருவாய்மலர்ந்தருளினர். அதற்கவ்வறிஞன் அடியேனுக்கு வாசஸ்தானம்வேண்டுமென்று பிரார்த்திக்க, நீரவிமதிகளிடம் சென்று மிதுன கன்னியா ராசிகளைப் பெற்றுக்கொள்வாயாக வென்று திருவாய்மலர்ந்தருளி அந்தர்த்தானமாயினர். அப்புதன் சிவாக்ஞையின்படியே ரவிமதிகளிடம் சென்று மிதுன கன்னியாராசிகளைப்பெற்றுக் கொண்டனன். இச்சிவபூசாபலத்தினால் பண்டிதன் என்னும் பெயரையும் அநேக பரிவாரங்களையும் பெற்றுக்கொண்டனன். இவனால் பூசிக்கப்பெற்ற இலிங்கம் சௌமியநாதலிங்கம் எனப்பெயர் பெறும்

பைடீனசகோத்திரோத்பவனாகிய ராகுவானவன்; நிருமல நிராதார நிஷ்கள சின்மயவடிவான ஸ்ரீ சிற் சபாநாதர் நிருத்த சபையின் கண்ணே பங்கயக்கண்ணன் தண்ணுமைகொட்டவும் பங்கயாசனன் தாளம் தட்டவும் நாரதர்தும் புருவீணை வாசிக்கவும் நடனமாதர் நல்லிசை பாடவும் நடனகாளியோடு வாது நட

மாடி அவள் அகங்காரமோகங்களை அடக்கி ஊர்த்தவதாண்டவம் செய்தருளிய தில்லைவனத்தையடைந்து சிவகங்கையில் ஸ்நானம் செய்து ஸ்ரீ பஞ்சாக்ஷர செபமுடித்து அதன் வடகரையிலே ஓர் சிவலிங்கம் கண்டு அதனை விதிப்படி அன்புடனே பூசைசெய்து கொண்டு வருவானாயினன். இப்படி நிகழுநாளிலே ஓர்நாள் அளவு கடந்த திருவருளை திருமேனியாகக்கொண்ட எமைமதையன் ஆகாசத்திலே விருஷபாரூடராய் உமாதேவியாரோடும் தோன் றியருளினர். அதனைக்கண்ட பணியானவன் பணிந்து எழுந்து பராவி நின்றனன். ஸ்ரீமந் நடேச பெருமான் உனக்கு வேண்டிய வரங்களைக்கேட்பாயாக என்று திருவாய்மலர்ந்தருளினர். அதற்கு அவன் எம்பெருமானே அடியேனுக்கு வாசஸ்தானம் வேண்டு மென்று பிரார்த்தித்தனன், அதற்குச்சிவபெருமான் ரவியினிடம் சென்று தனுராசியைப்பெற்றுக்கொள்வாயாக என்று திருவாய் மலர்ந்தருளி அந்தர்த்தானமாயினர். உடனே அவன் ரவியினிடம் சென்று சிவாக்ஞையின்படியே தனுசு ராசியைப்பெற்றுக் கொண் டனன் இச்சிவபூசாபலத்தால் அநேக பரிவாரங்களைபெற்றுக் கொண்டனன். இவனால்பூசிக்கப்பெற்ற இலிங்கம் ராகுநாதலிங்கம் எனப்பெயர் பெறும்.

சைமினி கோத்திரோத் பவனாகிய கேதுவானவன்; சச்சிதா னந்த மூர்த்தியாகிய ஸ்ரீமந்நடேசபெருமான் நடனஞ்செய்தருளு கின்ற பரமபதியாகிய இத்தில்லை வனத்தையடைந்து, சிவகங்கை யிலே ஸ்நானஞ்செய்து ஜெபதபமுடித்து அதன் வடகரையிலே ஒரு சிவலிங்கம் கண்டு அதனை அன்போடு பூசைசெய்துகொண்டு வருவானாயினன். இப்படி நிகழுநாளிலே ஒருநாள் சிவபெருமான் விண்டு வாகிய விடையின் மீது உமாதேவியாரோடும் தோன்றி யருளினர். அதனைக்கண்ட கேது வானவன் பணிந்து எழுந்து பராவிநின்றனன். ஸ்ரீமந் நடேசபெருமான் உனக்கு வேண்டிய வரங்களைக் கேட்பாயாக என்று திருவாய்மலர்ந்தருளினர். அத ற்கு எம்பெருமானே தமியேனுக்கு ஓர் வாசஸ்தானம் தந்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தனன். சிவபெருமான் நீ மதினியி டம் சென்று மிதுனராசியைப்பெற்றுக் கொள்வாயாக என்று திருவாய்மலர்ந்தருளி அந்தர்த்தானமாயினர். உடனே கேதுவான வன் மதியினிடம் சென்று சிவாக்ஞையின்படியே மிதுனராசியை

ப்பெற்றுக்கொண்டனன். இச்சிவபூசாபலத்தால், கிராதிபதித்துவதத்தையும், அநேக பரிவாரங்களையும் அடைந்தான். இவனால் பூசிக்கப்பெற்ற இலிங்கம் கேதுநாத இலிங்கம் எனப் பெயர் பெறும்.

இவ்வொன்பது இலிங்கங்களும் இருக்கும் இடம், நவலிங்காலயம் என்று வழங்கப்படுகின்றது.

முதலத்தியாயம் முற்றிற்று.

## 2-வது அத்தியாயம்.

சூதமுனிவர் சௌனகாதி முனிவர்களை நோக்கிப் பின்னருங்கூறுவாராயினார். ஏ! முனிபுங்கவர்களே இதன் பெருமையை இன்னும் கூறுகிறேன் கேட்பீர்களாக. கேரளதேசத்திலே கேகயம் என்று ஒரு நாடுளது. அவ்வூரில் கேசவன் என்னும் ஓர் பிராமணன் தன்வருணாச்சிரம தருமங்களையெல்லாம் விடுத்துப் பாவமே திரண்டொரு வடிவெடுத்தாற்போன்று, படிற்றொழுக்கம் பலவும் பூண்டு திரிவானாயினன். இவனுக்கு பூர்வகன்ம பலத்தால், கிரகசர்மன், தூலசர்மன், பிரகத்குக்ஷி, வாமனன், தீர்க்கநாசி, ஹ்ருஸ்வபாணி, தீர்க்கபாதன், சுவேதசர்மன், கிருஷ்ணசர்மன், என ஒன்பது குமாரர்கள் பிறந்தார்கள். இவர்கள் பூர்வகன்மவசத்தால் கிரகசர்மா என்பவன் தீராவியாதியினாலும், தூலசர்மாஎன்பவன் புத்திரர் இன்மையினாலும் பிரகத்குக்ஷி என்பவ க்ஷேத்திரகீனத்தினாலும், வாமனன் ஒன்பவன் மூடத்தனத்தினாலும், தீர்க்கநாசி என்பவன் தரித்திரத்தினாலும், இருஸ்வபாணி என்பவன் மனைவியின்மையினாலும் தீர்க்கபாதன் என்பவன் பகைவரால் துன்புறுத்தப்படுவதினாலும், நெடுநாள் துக்கசாகரத்திலழுந்தி அதன் கரைகாணாதவரானார்கள்.

இவர்கள் பின் ஒருவாறு தேறி பாசுராமரைக்குறித்துப் பன்னிரண்டு வருடம் அருந்தவம் புரிந்தார்கள். பாசுராமர் அவர்கள் செய்யுந்தவத்திற்கிரங்கியவர்கள் முன்னெழுந்தருளினார், கண்டவுடனே அவர்கள் அடியற்றமரம்போல் அவரது பாதாரவிந்தங்களில் விழுந்தெழுந்து அழுது தொழுது தத்தங்குறைகளைக்கூறி நின்றார்கள். இவர்களுடைய பரிதாபநிலையைக்கண்டு பாசுராமர் மிகவும் மனம்பதைத்து இத்துன்பத்தினின்றும் இவர்களை நீக்கும் உபாயம் எதுஎன்று ஆலோசித்து அரியமறைகளின் முடிவாகிய உபநிடதங்களின் உண்மைப் பொருளையே இவர்கட்குபதேசித்தலே நலம் என்று தீர்மானித்துக் கூறுகின்றார்.

கேசவகுமாரர்களே! இங்கே என்னாற்கூறப்படுகிற அதிபரமாப்த விஷயங்களைக் கவனமாகக் கேட்கக்கடவீர்கள் சரீரந்தோறும் ஜீவனானவன்கேசாதிநகபர்யந்தம்வியாபித்திருக்கிறான். ஆயினும் நாபிக்குமேல் கண்டத்துக்குக்கீழான அநாகதத்தானத்திலே காம்போடுகூடிய வாழைமொட்டைப்போல் அதோமுகமாய்த்தொங்கிக்கொண்டிருக்கிற இருதயகமல மத்தியில் அதி

சூக்குமமான குகை ஒன்றிருக்கிறது அதனுள்ளடங்கிய ஆகாய மேதகாராகாயுமாம் அவ்வாகாயத்திலே ஜீவன் முக்தியடைய் வசிக்கிறான். அக்குகையின் உள்ளடங்கிய வெளியேஜீவரந்திரம் எனப்படும் அது சுருங்கிய வெளியுடைபட்டால் சுவாசம் நின்றுவிடும் அப்பொழுது நாம் பிராணன் நீங்கிவிட்டதென்று சொல்வோம். ஜீவன் தன் றொழிலைவிடுகிறான். அந்த இருதயகமலத்தைச் சுற்றிலும் சூர்யனைக்கிரணம் சூழ்ந்திருப்பது போல் எழுபத்திராயிரம் நாடிகள் உற்பத்தியாகி சரீரமெங்கும் வியாபித்திருக்கின்றன, அவைகளில் நூறுநாடிகள் சுகதுக்க போக போக்கிய காரணங்களுக்கேதுவாய் கன்மபலன்களையடையச் செய்கின்றன. மூலாதார முதல் ஆக்ஞைபர்யந்தம் சுழுமுனைநாடி யானது நடுவே நிற்கும் இதினின்றும் ஒவ்வொரிந்திரியங்களுக்கும் பத்துப் பத்து நாடிகள் செல்லுகின்றன இவைமுடிச்சுகளாயிருக்கும் பத்து முடிச்சுகள் சரீரத்தில் உள்ளன. இடப்பக்கம் இடகலையும் வலப்பக்கம் பிங்கலையுமாக இரண்டு நாடிகள் பாதாதியாக எழுந்து கர்த்தரிரூபமாய் மாறிமேனோக்கி யெழுந்து இருபக்கங்களிலும் சரீரத்தில் வியாபித்திருக்கும். இத்தகராகாயத்திலே ஜீவனை உடனிருந்து ஆட்டுவிக்கிற பொருள் எதுவோ அதுவேபிரமமாம். பிரமம் ஆகாச சரீரமுடையதென்றும் சத்ரூபம் உடையதென்றும் ஆனந்தம் உடையதென்றும் அமிர்தஸ்வரூபமாயுள்ளதென்றும் கூறப்படும் ஆகாசமே நாமரூப காரணமாயிருத்தலால் இவ்வாகாசம் சிதாகாசமேயாம்.

பூதாகாசமேன்றல் பொருந்தாது எனெனில் விசேஷமின்மையால் என்க. உலகங்களைப்படைக்கின்ற பிரமாவுக்கு இருதயகமலத்தானமாய் விளங்குவது சிதம்பரம் எனப்படும். அங்கே அனவரதமும் ஆனந்ததாண்டவம் புரிந்தருளுகின்ற சிவமே சிதாகாசமாம் இருமைபொருந்திய ஞானமயமாய்விளங்குகின்றமையினாலே சபாபதியைச் சிதம்பரம் என்று வேதங்கள்கூறும். வேதங்கள் முதலிலும் நடுவிலும் இறுதியிலும் எடுத்துச்சொல்கின்ற உருத்திரனை சச்சிதானந்தஸ்வரூபியாய் யாவராலும் கிட்டுதற்கரிதாய் இருதயகமலத்தில் தியானித்து ஏத்தற்பாலதாகிய ஞானகாசம் என்று எசுர்வேதத்திலும் கூறப்பட்டிருக்கிறது. ஆகையால் நீங்கள் சிதாகாசஸ்வரூபியாய் விளங்குகின்ற சிவத்

Q23:41
N24

தைமனதிலே தியானித்து சிதம்பரதலத்தை யடைந்து அங்கே சிவகங்கையின் வடகரையிலே சூர்யன் முதலாயினோரால் ஸ்தாபித்து அருச்சிக்கப்பட்ட நவலிங்கங்களையும் கண்டு பூசித்து வழிபடுவீர்களாயின் உங்களைவருத்துகின்ற இத்தீவினைப்பயன், சூரியனைக் கண்டபனிபோல் நீங்கிவிடும் என்று உபதேசித்தருளினர்.

பரசுராமர் கூறிய பரமாப்தவாக்கியங்களைக்கேட்ட அவ்வொன்பதின்மரும் பரமானந்தமடைந்து அவரிடம்விடைபெற்றுக்கொண்டு கேரளதேசத்தினின்றும் நீங்கிப் பூர்வஜென்மபுண்ய வசத்தால் இப்புண்டரீகபுரத்தை வந்தடைந்தனர்கள்.

சிதம்பரமே சபாபதியெனப்படுதலால் இத்தலத்தைக்காலினால் மிதிப்பதற்கஞ்சி மனமுருகி இந்நகர்ப்புறத்தே உள்ள ஒரு தடாகத்தில் ஸ்நானம்செய்து நித்தியகர்மாநுஷ்டனங்களை முடித்து நியமமுடையவர்களாய் ஊரின் புறமாகிய ஆறுமாவரணத்தைவலம் வந்து துதித்துத் தூலலிங்கமாகிய கோபுரங்களைத்தரிசித்து துவாரகபாலர்களை வணங்கிக்கொண்டு திருநந்திதேவரிடம் உள்ளே செல்லவிடைபெற்று உத்தமமகாகணபதியாகிய முக்குறுணி விநாயகரையும் மேலைக்கோபுரவாயிலின்கண்ணே விளங்குகின்ற கற்பகவிநாயகரையும் சிவசுப்பிரமணியக்கடவுளையும் தரிசித்துச் சிவகங்கையைக்கண்டு சமீபித்து ஆசமனம்செய்து சங்கல்பமுடித்து விதிப்படி ஸ்நானஞ்செய்து தேவசபையைப்பிரதக்ஷிணம்செய்து விடையினிடம் விடைட்பெற்று புருஷாமிருகத்தைவணங்கி புனிதர்களாகி மாயாபாசவீக்க நீக்கமடைந்து பேரம்பலத்தைத்தரிசித்து உள்ளே சென்றார்கள்.

அங்கே சிற்சபையின்கண்ணே ஸ்ரீமந் நடராஜபெருமான் "என்று வந்தாய்" என்னுங்குறிப்புற்ற புன்முறுவலோடு கூடிய திருமுகமும் கோடிசூர்யரொளிபோன்ற ஒளியும், கொன்றையும் கூவிளமும், கங்கையும் பிறையுந்தவழ்கின்ற சடையும் சோமசூரியாக்கினியாகிய மூன்று கண்களும் சங்கக்குண்டலம் பொருந்திய வலத்திருச்செவியும், திருத்தோடுபொருந்திய இடத்திருச்செவியும், திருநீலகண்டமும், நான்குதிருப்புயங்களும், அபயமும் டமருகமும் பொருந்திய வலத்திருக்கரங்களிரண்டும், ஸ்ரீ

181325

குஞ்சிதபாதத்தை நோக்கித் தொங்கவிட்ட டோளகரம், அக்கினி அகல் ஏந்தியகரமும் ஆக இடத்திருக்கரங்களிரண்டும், புலித் தோலையுடையாகக் கொண்டுவிளங்குந் திருவரையும், முயலகன் மீது அதன் முதுகுநெரியும்படி யூன்றியவலத்திருப்பாதமும், தூக்கிவளைத்த இடத்திருப்பாதமும், உடையவராய்ச சிவகாமி யம்மையார்காணத் தென்றிசை நோக்கி, அனவரதமும் ஆனந்த தாண்டவம் புரிந்தருளுதலைக்கண்ட மாத்திரத்தே, மனமானது அழலிடைப்பட்டவெண்ணெய்போல நெக்குநெக்குருக, கண்களி னின்றும் ஆனந்தவருவிபொழிய, விம்மிதமுற்றுச் சிவானந்த வெள்ளத்தின்மூழ்கி யின்புற்றார்கள்,

பின் அவ்விடத்தினின்றும் பிரியமனமில்லாதவர்களாய்ப் பிரிந்து வலமாகச்சென்று விநாயகர் சுப்பிரமணியர் வைரவர்முத லிய மூர்த்திகளைத்தரிசித்து மும்முறைவலம் வந்து சண்டேசுரத ரிசனம் செய்து நீங்கினார்கள். பிறகு நிருத்தசபையையடைந்து காளியோடு ஊர்த்துவ தாண்டவம்புரிந்து அவள் அகங்காரத்தை யும் மோகத்தையும் அடக்கி ஆண்டருளிய ஊர்த்துவதாண்டவ மூர்த்தியையும், சரபேசுரரையும் தரிசித்து அநாதிமுத்த நித்த ஷாட்குண்யரான ஸ்ரீமூலட்டானேசுரரையும் உமையபார்வதி தேவியாரையும் வணங்கித்துதித்து தக்ஷிணாமூர்த்தி முதலிய மூர்த்தங்களையும் முறையே வணங்கி அவ்விடம் விட்டகன்று அகிலலோகைகநாயகியாகிய சிவகாமியம்மையார் திருக்கோவிலை யடைந்து விதிப்படியே பிரதக்ஷிணநமஸ்காராதி புரிந்துஉள்ளே சென்று மரகதமாணிக்கம்போன்ற பச்சைநிறத்திருமேனியும் மதுமலர்ப் போதுளுங்கூந்தலும் மலர்ந்தசெந்தாமரைமலர்போ ன்ற திருமுகமும் திருமங்கலசூத்திரமும் செங்கழுநீர்மலர் பிடித் தவலத்திருக்கரமும் கடிக்கீழ்த்தொங்கவிட்ட இடத்திருக்கரமும் மிகஒடுங்கிய திருநிலையுமுடைய சிவகாமியம்மையாரை வணங்கி த்துதித்துக்கொண்டு சிவகங்கையின் வடகரையையடைந்து பரசு ராமர் தங்களுக்குக் கூறிய நவலிங்கங்களையும் கண்டு ஆனந்தம டைந்து ஒவ்வொருவரும் தனித்தனியே ஒவ்வொரு இலிங்கங் களையும் பூசிக்க வாரம்பித்தார்கள்,

கிரகசர்மா என்பவன் பானுநாத இலிங்கத்தைத் தினந்தோறும் திரிகாலபூசைசெய்து மூன்றுபக்ஷங்களில் சர்வரோகங்களினின்றும் நீங்கி வச்சிரகாயம் பெற்றனன்.

தூலசர்மா என்பவன் சோமநாத இலிங்கத்தைப் பூசித்து சற்புத்திரர்களைப்பெற்றனன்.

பிரகத்குக்ஷி என்பவன் பௌமநாத இலிங்கத்தைப் பூசை செய்து சர்வசாஸ்திர பண்டிதனுனன்.

தீர்க்கநாசி என்பவன் ஜீவநாத இலிங்கத்தைப்பூசைசெய்து பெருநிதியெய்தப் பெற்றனன்.

இருஸ்வபாணி என்பவன் பிருகுநாத இலிங்கத்தைப்பூசை செய்து இலக்குமிக்கொப்பான உத்தமகுணகன்னிகையை விவாகஞ்செய்து கொள்ளப்பெற்றனன்.

தீர்க்கபாதன் என்பவன் சௌரிநாத இலிங்கத்தைப்பூசை செய்து தன்னுடைய சத்துருவைவென்று தன் பூமியையும் பெற்றுக்கொண்டனன்.

சுவேதசர்மா என்பவன் ராகுநாத இலிங்கத்தைப்பூசை செய்து விஷரோகத்தினின்றும் நீங்கினுன்.

கிருஷ்ணசர்மா என்பவன் கேது நாதஇலிங்கத்தைப்பூசை செய்து கொண்டுவர தக்ஷிணுமூர்த்தியாயெழுந்தருளிய ஸ்ரீகண்டபரமேசுவரன் ஆசாரியத்திருமேனிகொண்டெழுந்தருளி அவன்முன்வந்தார்.

அவரைக்கண்டவுடனே கிருஷ்ணசர்மா என்பவன்; விரைந்தெழுந்து பணிந்து நின்றனன். அவ்வாசாரியர் திருவருணேக்கஞ் செய்தமாத்திரத்தே, சஞ்சிதவினை நீங்கபெற்று அவரது திவ்யசரணுரவிந்தங்களில் பணிந்து மெய்யுணர் வெய்தி, "அடியேன், ஜனனசாகரத்தைக் கடந்து, முத்தியின்பத்தைப் பெற்றுய்யுமாறு ஞானேபதேசம் செய்தருளவேண்டுமென்று மிக்கவிநயத்தோடும் பிரார்த்திக்க" அப்பரமாசாரியாராகிய பரமசிவம் திருவாய்மலர்ந்தருள்வாராயினர்.

1 அவன் அவள் அது என்றுசுட்டியுணரப்படுவதாகிய உலகம், தோன்றி நின்று அழியும்; கார்யமாயுள்ளதாகையால் நிமித்தகாரணனுகிய சங்காரகருத்தாவையே தனக்குத்தலைவனுக உடையது.

1. உலகம் தோன்றி நின்று அழியும் கார்யமாயுள்ளது.
2. இக்கார்யத்திற்குக் காரணன் அரன்.
3. பிரவிட்டுணு பிறந்திறந்துழல்வர்.

2 முற்கூறிய கருத்தா, ஜகத்துக்கு வேறுனுலும் வியாபகனுகையால், தன்னைவிட்டுப்பிரியாமல் கூடியிருக்கிற ஆக்ஞாசத்தியினுலே, ஆன்மாக்களுக்கு அவரவர்செய்தகர்மானுசாரப்படி சிருஷ்டியாதி பஞ்சகிருத்தியங்களைச்செய்கிறுர்.

1. அரன் உயிர்களின் இரண்டற நிற்பன்
2. உயிர்களுக்குக் கன்ம பலனை அரனே கொடுப்பன்
3. உயிர்கள் அச்சுமாறியே பிறக்கும்
4. அரன் சருவவியாபகன்.

3 ஆன்மா சரீரத்திலே இல்லை என்று சொல்வதனுலும், இந்திரியவிஷயங்களை யறிவதனுலும், நித்திரையிலே அறியாமையினுலும், சாக்கிரத்திலேதானே அறிவதனுலும், சரீரம்தொழிற்படுகையினுலும், உண்டு என்றே சொல்லப்படும்.

1. இல்லையென்கிற அறிவுடனே சொல்லுகையினுலே அறிவுயிர் உண்டு.

2. எனது உடல் என்று வேறுபிரித்துக்கூறுவதனுலே உடலுக்குவேறுக உயிர் உண்டு.

3. சத்த, பரிச, ரூப, ரஸ, கந்தங்களை ஒருவனே அறிதலின் ஒவ்வொன்றை மாத்திரம் அறிகிற ஐம்பொறிகட்கு வேருய் உயிர் உண்டு.

4. கனவுடலைவிட்டு நனவுடலிலே வருகையினுலே அக்கனவுடற்கு வேருய் உயிர் உண்டு.

5. நித்திரையிலே பிராணவாயு தொழில்செய்யவும் சரீரத்துக்குப் புசிப்புந்தொழிலும் இல்லாதபடியினுலே பிராணவாயுவுக்கு வேருய் உயிர் உண்டு.

6. மறந்தும் மறந்தும் நினைக்கிறபடியினாலே மறவாமல் இருக்கிற கடவுளுக்கு வேறாய் உயிர் உண்டு.

7. எல்லாதத்துவங்களுக்கும் வேறு வேறு பெயர் இருத்தலினாலே அந்தந்ததத்துவங்களுக்கும் வேறாய் உயிர் உண்டு

4. அவ்வான்மா (அபாவாசியிருளை பொளிஎன்று சொல்லும்படியான) ஆணவாதிமலங்களினாலேமறைக்கப்பட்டஇச்சாக்கிரியாஞான சத்திகளையுடையவனாய் அந்தக்கரணங்களுக்கு வேறான வனாயிருந்தாலும், மந்திரியோடு கூடியமகாராஜாவைப்போல் பஞ்சாவஸ்தைகளையும் அடைகிறான்.

1. அந்தக் கரணங்களுக்கு உயிர் கூடினாலன்றித்தொழில் இல்லாத படியினாலே அந்தக்காரணங்களுக்கு வேறாய் உயிர் உண்டு

2. மலம்மறைப்பதால் உயிருக்கு அறிவில்லை

3, உயிர் அவஸ்தைப்படும்

5. இந்திரியங்கள் விஷயங்களைத்தனே அறியாது ஆத்மாவினாலே அறிகிறது. அதுபோல ஆன்மா மலபந்தனுகையினாலே தான் அறியாது, சிவனாலே அறிகிறான். ஆன்மா இந்திரியவாசனையினால் விகாரியாவது போல் சிவனும்ஜீவனோடு கூடியிருத்தலினால் விகாரியாவனோ எனில்! அப்படியல்ல காந்தம் இரும்பைத் தொழிற்படுத்துவதனால் விகாரமடையாத வாறுபோல சிவனும் சீவனை தொழிற் படுத்துவதனால் விகாரியாகான்.

1. உயிரால் தத்துவங்கள் எல்லாம் தொழில்செய்யும்

2. உயிர்கள் எல்லாம் சிவனாலே அறியும்

6. சிவனுடையரூபமானது (முயற்கொம்புபோலக்) காணப்படாததானால் இல்லாத பொருளாம். (கடபடாதிகளைப்போல்) காணப்பட்டதானால் ஜடபதார்த்தமாய அழிவெய்தும். ஆகையால் ஞானவான்கள் இவையிரண்டிற்கும் வேறான அறுபவஞானத்தினால் அறியப்பட்டதாகச் சொல்லுவாரகள்.

1. உயிர் அறிவினாலே அறியப்பட்ட எல்லாம் அழியும்
2. அப்பிரமேயமாக அறியப்பட்டவனே சிவன்

7. அசித்தாகிய பிரபஞ்சம் சித்தாகிய சிவத்தையறியாது. சித்தாகியசிவம் அசித்தாகிய பிரபஞ்சையறியாது. எப்படியெனில், சூரியன் முன்னிருள்போல், சிவத்துக்குமுன் பிரபஞ்சம் நில்லாது ஆகையினாலே சிவத்தையும் பிரபஞ்சத்தையும் சிவசத்தியினாலே அறிகிறவனாகிய ஆன்மா இவ்விரண்டிற்கும் வேறானவன் ஆவான்,

1. அரன் பாசத்தை அநுபவியான்.
2. பாசம் அரனை அநுபவியாது.
3. உயிர் அவ்விரண்டனையும் அடையும்.

8. இந்திரியங்களாகிய வேடர்களோடு கூடித்தன்னையறியா்மல் உழலும் ஆன்மா; குருவினாலே தன்னை இன்னானென்றறிந்து இந்திரியவேடர்களைவிட்டு சிவபதத்தை அடைகிறான்.

1. உயிருக்கு நல்லறிவு தவத்தினாலேயேவரும்
2. உயிருக்குச் சற்குருவாக வருவது அரனே
3, உயிர் பஞ்சேந்திரியங்களைப் பற்றுகையினாலே தன்னையும் அறியமாட்டாது.

4. உயிர் பஞ்சேந்திரியங்களிலும் பற்றற்றால் தன்னையும் அறியும்.

9. மெய்ஞ்ஞானியானவன் ஆத்மாவாகிய தன்னிடத்திலே ஆத்மசிற்சத்தியாகிய கண்ணினாலே, ஈசனைக்கண்டு பிரபஞ்சமாகிய கானலைப்பொய்யெனவிட்டு நீங்கி, சிவஷாட்குண்ய நிழலையடைந்து ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தியானம் பண்ணிக்கொண்டிருப்பன்.

1. உயிர் அரன்ஞானத்தினாலேயே அரனைக்காணும்
2. உயிர் பாசத்திலே பற்றற்றால் அரன்வெளிப்படுவான்.
3. பஞ்சாக்ஷரசெபம் பண்ணினால் வாசனைமலம்போம்

10. சிவனோடு ஐக்கியமடைந்து அறிவுமாத்திரமாய் சேடி

த்து நிற்கிற புருஷனானவன் சிவவசமாய்க்காணப்பட்டு மலமாயா திபாசங்கள் தன்னை பரிசிக்கப்பெறாது சுவாநுபூதிமானாக சிவ போகத்தை யடைவான்.

1. அரனுடன் ஒன்றாகநில்
2. உன்றொழில் எல்லாம் அரன்பணி என்றேகொள்

11. கண்களுக்குக் காட்டுகிறவனாயிருக்கிறவன் ஆன்மா: ஆன்மாக்களுக்குக்காட்டுகிறவனாய் இருக்கிறவன் சிவன்: ஆகையி னாலே தன்னை உபகரிக்கிற சிவனிடத்திலே முக்கியமாய் பத்தி பண்ணக்கடவன்.

1. ஞானிக்கு வருகிற விஷயங்களை அரனே அநுப விப்பன்.

2. அரனைமறவாமல் அன்பிருந்தால் அவனிடத்தில் ஐக்கியமாய்ப்போவான்.

12. முத்தியை அடையும் பொருட்டு ஞானவான்களைய டைந்து அவர்கள் திருவேடத்தையும் சிவாலயத்தையும்பஜிக்கக் கடவன் என்றறிக. இதுவேசைவார்த்த நிர்ணயமாம்.

1. மும்மலங்களையும் களைக
2. சிவஞானிகளுடனே கூடுக
3. சிவஞானிகளையும் சிவலிங்கத்தையும் சிவன் என் றே தேறி வழிபடுக
4, வழிபடாதவரை ஒழிக

13, என்று சர்வசாஸ்திரங்களின் உண்மைப் பொருளை சமுத்திரகலச நியாயமாக உபதேசித்து அஸ்த மஸ்தகசையோக தீக்ஷைசெய்து மறைந்தருளினர்.

சிவபெருமான் மறைந்தருளிய பின்னர் கிருஷ்ணசர்மாமெ ய்ஞ்ஞானத்தை யடைந்து சிற்சபையை இருதயகமலமாகவும் கனகசபையைக்கண்டஸ்தானமாகவும், இராஜசபையைமுகமாக வும், நிருத்தசபையைப்புருவமத்திய ஸ்தானமாகவும், தேவசபை

யைப் பிரமரந்திரஸ்தானமாகவும், இந்நவலிங்காலயத்தைத் துவா தசாந்தஸ்தானமாகவும், சிவகங்கையை, சகஸ்தரதளமத்மத்தியி லூறும் அமிர்தமாகவும், சோடசகாலர்சோதனை செய்து உன்மனா னாந்தநிஷ்களபரசிவத்துய[illegible]பரனாகி ஸ்ரீமந்நடேசப்பெருமானைத் திரிகாலமுந்தரிசனம் செய்து கொண்டு சிதம்பரவாசமே முத்தி யைத்தருமென்றுணர்ந்து சிவபெருமானை வழிபட்டு இத்தலத்தி லேயே வசித்துச் சிவானந்தப் பெரு வாழ்வெய்தப்பெற்றனன்.

இவனுடைய சகோதரர் எண்டரும் சர்வாபீஷ்டசித்தியும் எய்தப் பெற்றவர்களாய்த் தங்கள் தேசம் சென்று சுகமாகவாழ்ந்திருந்தார்கள்; என்று சூதமுனிவர் சௌனகாதி முனிவர்களுக்குக்கூறினார். இச்சரித்திரம் சிதம்பரசாரம் என்னும் வடமொழி நூலில் முப்பத்திரண்டு முப்பத்துமூன்றுமத்தியாயங்களிற் கூறப்பட்டுள்ளது.

திருச்சிற்றம்பலம்.

நவலிங்கமான்மியம்.

முற்றுப்பெற்றது.

சென்னை-600
18|325

உ

சிவமயம்.

# பிழைதிருத்தம்

| பக்கம் | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 1 | 5 | யே | ஹே |
| 2 | 1 | கோத்திற்பலன் | கோத்திரோற்பவன் |
| 2 | 20 | பதித்தவம். | பதித்துவம் |
| 2 | 24 | அந்தணம். | மந்தணம். |
| 4 | 8 | பெறும. | பெறும். |
| 4 | 29 | பெற்றா | பெற்றார். |
| 7 | 1 | ஊர்த்தவ. | ஊர்த்துவ. |
| 7 | 6 | எமைமதையன் | எமதையன். |
| 7 | 29 | எ.ம்பெமானே. | எம்பெருமானே. |
| 8 | 2 | பதித்துவதத்தை. | பதித்துவத்தை. |
| 9 | 9 | ஹ¯ஸ்பாணி. | இரஸ்வபாணி. |
| 9 | 14 | இருஸ்வபாணி. | இரஸ்வபாணி. |
| 9 | 13 | ஒன்பவன். | என்பவன். |
| 9 | 20 | கிரங்கியவர்கள். | கிரங்கி அவர்கள். |
| 9 | 21 | டாதார. | பாதார. |
| 9 | 26 | உண்மைய. | உண்மைப். |
| 9 | 29 | சரீரம் தோறும். | சரீரந்தோறும். |
| 10 | 23 | மேன்றல். | மென்றல். |
| 10 | 30 | ஸ்வரூமி. | ஸ்வரூபி. |
| 11 | 21 | விடைப்பெற்று. | விடைபெற்று. |
| 13 | 10 | இருஸ்வபாணி. | இரஸ்வபாணி. |
| 13 | 29 | பரமசிவம். | பரமசிவன். |
| 14 | 6 | பிரவிட்டுணு. | பிரமவிட்டுணு. |
| 14 | 14 | சருவவியாபகன் | சர்வவியாபகன். |
| 15 | 3 | எல்லாதத்துவம். | எல்லாத்தத்துவம். |
| 15 | 7 | சத்திகனை. | சத்திகளை. |
| 16 | 4 | பிரபஞ்சை. | பிரபஞ்சத்தை. |
| 18 | 2 | மத்மத்தி. | பத்மமத்தி. |